**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 17/2022 PW1**

12.08.2025 **வா.சா.1 பழனி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

இந்த வழக்கில் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட காலத்தில் ஒப்பந்த பத்திரம் கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டும் என்ற சட்ட விதி அமுலில் இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாததால் சட்ட விதி மீறல் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் எழுதியவர் யார் என்று குறிப்பிடப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தான் எழுதினேன். அதேபோல் வா.சா.ஆ.2ல் சாட்சிகள் யாரும் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் ரெவின்யூ ஸ்டாம்ப் மீது கையொப்பம் ஏதும் இடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 என்னால் போலியாக தயார் செய்யப்பட்டது என்றும், அதில் 2ம் பிரதிவாதி கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் மனைகளாக பிரித்து கல் நடுவது போன்ற செலவுகளுக்கு நான் ரூ. 5 லட்சம் செலவு செய்ததாக சொல்வதை நிருபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் என்னிடம் ஆதாரம் உள்ளது. நான் மாசிலாமணியிடம் முன்பணம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டு உரிய காலத்தில் மீதி தொகை கொடுத்து கிரையம் செய்து கொள்ள முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மீதி கிரையத் தொகையை மாசிலாமணியிடம் கொடுக்க முயன்றதையும் அதனை மாசிலாமணி வாங்க மறுத்ததையும் நிருபிக்க என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. என்னுடன் ரியல் எஸ்டேட் தொழிலில் இருந்த பங்குதாரர்கள் பிரிந்து சென்று விட்டார்கள் என்றும், அதனால் என்னால் மீதி தொகை கொடுத்து கிரையம் செய்து கொள்ள முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் மீதி கிரையத் தொகையை கொடுத்து கிரையம் செய்ய முன்வராததாலும், வழக்கு சொத்தை சேதம் ஏற்படுத்தியதாலும், ஏற்பட்ட மனஉளைச்சலில் மாசிலாமணி இறந்து விட்டார் என்றால் சரியல்ல. அவர் வயது மூப்பு காரணமாகத்தான் இறந்தார். வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்தில் அவர் நல்ல உடல்நிலையுடனும், ஆரோக்கியத்துடனும் இருந்தார் என்றும், நான் மீதி கிரையத் தொகையை கொடுத்து கிரையம் செய்ய முன்வராததாலும், வழக்கு சொத்தை சேதம் ஏற்படுத்தியதாலும் தான், ஏற்பட்ட மனஉளைச்சலில் மாசிலாமணி இறந்து விட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சாட்சிகளுடன் வந்து மீதித் தொகையை கொடுத்து

கிரையம் செய்து கொள்ள கேட்ட போது நான் தான் மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. ஏறக்குறைய 9 ஆண்டு காலம் என்னால்தான் விவசாய நிலம் கரம்பாக மாறி விட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 2 போகம் விளையக்கூடியது என்றால் சரியல்ல. தலா ஒரு போகத்திற்கு ரூ. 30 ஆயிரம் வருவாய் வீதம் இரண்டு போகத்திற்கு சேர்த்து 9 ஆண்டுகளில் ரூ. 36 லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ரூ. 10 லட்சம் மதிப்புள்ள கிணறையும் பம்புசெட்டையும் நான் பாழ் படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பணத்தை கொடுக்க முன்வந்தும் பிரதிவாதிகள் அதனை பெற்றுக் கொள்ள மறுத்து கிரையம் செய்ய முன்வராதது சம்மந்தமாக அவர்களுக்கு சட்ட அறிவிப்பு ஏதும் நான் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் நான் மீதி தொகையை கொடுக்க முன்வந்திருக்கும் பட்சத்தில் அதை பிரதிவாதிகள் மறுத்திருப்பார்களேயானால் நான் நிச்சயம் அது குறித்து அவர்களுக்கு சட்ட அறிவிப்பு கொடுத்து ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் சொல்வது பொய் என்பதால் தான் அவ்வாறு நான் வழக்கு தாக்கல் செய்யாமல் பணத்தை மட்டும் திருப்பி தருமாறு 10 ஆண்டுகள் கழித்து மாற்றுப் பரிகாரம் மட்டும் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.